DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W. 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணியன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | அமிர்தலிங்கம் |
| ஊர் | : | தென்னம்புலம் | தாலுக்கா | : | வேதாரண்யம் |
| ஜாதி | : | -- | வயது | : | 72 |
| மதம் | : | -- | தொழில் | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.08.2026

**2ம் எதிரி இறப்பு. 1, 3 முதல் 8,11,12 எதிரிகள் ஆஜர். 9,10 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தென்னம்புலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய தொழில் பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று வராத 9ம் எதிரி கார்த்திக், 10 எதிரி வீரஎழிலன் ஆகியோர்களை தெரியும். கடந்த 16.02.2007 அன்று சுமார் மாலை 07:00 மணி அளவில் நான் எனது சகலை K.தியாகராஜன் உடன் அவர் வீட்டில் இருந்தேன். அப்போது அவரின் மனைவி வசந்தா(அ.சா.1) அவரின் மகன் அஜய்கணேஷ்(அ.சா.10), தியாகராஜனின் தாயார் வள்ளியம்மையுடன் அமர்ந்து பேசி கொண்டு இருந்தோம். அப்போது வெளியே ஒரு கார் வரும் சத்தம் கேட்டது. நாங்கள் ஜன்னலின் வழியாக பார்த்தபோது MSQ

6224 என்ற எண்ணுள்ள அம்பாசிடர் கார் வந்தது, அந்த காரில் இருந்து எங்கள் ஊரை சேர்ந்த ராஜசிம்மன்( ஆஜர் 1ம் எதிரி), பாபு (3ம் எதிரி), ஐயப்பன் (2ம் எதிரி) மற்றும் சிலர் இறங்கி வந்தார்கள்.

2. வீட்டின் வரண்டாவில் கிடந்த சைக்கிள், பிளாஸ்டிக் சேர், டியுப்லைட் இவைகளை அடித்து சேதப்படுத்தினார்கள்.சாட்சியிடம் அ.சா.பொ.2 உடைந்த சேர் துண்டுகள் காட்டப்பட்டு அடையாளம் காட்டுகிறார். அங்கு நிறுத்தப்பட்டு இருந்த இறந்து போன தியாகராஜனின் அம்பாசிடர் கார் கண்ணாடியை உடைத்து விட்டார்கள். அப்போது என்னுடைய கொளுந்தியா வசந்தா(அ.சா.1) அவரின் மகன் அஜய்கணேஷ்(அ.சா.10) ஐயோ ஐயோ என்று சத்தம் போட்டார்கள். அப்போது தென்னம்புலத்தினை சேர்ந்த 1ம் எதிரி ராஜசிம்மன் மற்றும் சிலருடன் தியாகராஜனின் வீட்டு கதவை திறந்து பயந்து கொண்டு இருந்த தியாகராஜனை பிடித்து வீட்டின் கொல்லை புறம் வழியாக இழுத்து சென்றார்கள். நான், வள்ளியம்மை, வசந்தா, அஜய்கணேஷ் எல்லோரும் சத்தம் போட்டோம்.

3. சத்தத்தினை காதில் வாங்காமல் வீட்டின் பின் பக்கம் உள்ள வயலின் பக்கம் இழுத்து சென்று விட்டார்கள். 1ம் எதிரி ராஜசிம்மனுடன் மற்ற நபர்களும் பின் தொடர்ந்து தியாகராஜனை அவரின் நெல் வயலில் கொலை செய்து விட்டார்கள். எனது கொழுந்தியா வசந்தா(அ.சா.1), அஜய்கணேஷ்(அ.சா.10) அவர்கள் இருவரும் பின் தொடர்ந்து சென்று இறந்து போன தியாகராஜனை வெட்டும் போது பார்த்து விட்டு இறந்து விட்டார் என்று சத்தம் போட்டார்கள். அப்போது நான் சென்று பார்த்தபோது வடகிழக்கு பக்கமாக தலையும், தென்மேற்கு பக்கமாக காலும் மல்லாந்த படி

கழுத்தில் வெட்டு பட்டு தலை தொங்கிய நிலையிலும், உடல் முழுவதும் வெட்டு காயத்துடன் இடது கை, வலது கையில் வெட்டு காயத்துடன், இடது கை சுண்டு விரல் துண்டிக்கப்பட்டு தொங்கி கொண்டு இருந்தது. அங்கு நான் இருந்து என் கொழுந்தியா வசந்தாவை கரியாப்பட்டினம் காவல் நிலையம் அனுப்பி புகார் கொடுக்க அனுப்பினேன்.

4. வசந்தா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த பின் போலீஸார் வந்தார்கள். பிரேதத்தினை அங்கிருந்து எடுக்கும் வரை நான் அங்கு இருந்தேன். இறந்து போன தியாகராஜனுக்கும், 1ம் எதிரி ராஜசிம்மனுக்கும் தேர்தல் முன் விரோதம் இருந்தது. இது சம்பந்தமாக தியாகராஜன் கையை 1ம் எதிரியும், அவரின் கூட்டாளிகளும் வெட்டியது சம்பந்தமாக கரியாப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. இது குறித்து போலீஸார் விசாரித்தபோது உண்மையை சொன்னேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

5. என் வீடு தியாகராஜன் வீட்டிலிருந்து வடக்கே சென்று பிரதான சாலையிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் ஓய்வு பெற்ற அஞ்சல் துறை அலுவலர் என்றால் சரிதான். பணம் கையாடல் தொடர்பாக என் மீது வழக்கு இருந்து அது முடிந்து விட்டது. 16.02.2007 அன்று சுமார் மாலை 07:00 மணி அளவில் நான் எனது சகலை K.தியாகராஜன் உடன் அவர் வீட்டில் இருந்தேன். அப்போது அவரின் மனைவி வசந்தா(அ.சா.1) அவரின் மகன் அஜய்கணேஷ்(அ.சா.10), தியாகராஜனின் தாயார் வள்ளியம்மையுடன் அமர்ந்து பேசி கொண்டு இருந்தோம் என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால்

சரியல்ல. வசந்தா மற்றும் அஜய்கணேஷ் அவர்களுடன் நான் இருந்ததாக சாட்சி சொல்லவில்லை என்றும், சத்தம் கேட்டு பின்னர் வந்து பார்த்தேன் என்றும் சொல்லியுள்ளதால் நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நடந்த நாள் அன்று மின்சாரம் துண்டிக்கப்பட்டதா என்றால் இரவு 08:30 மணி முதல் 11:00 மணி வரை துண்டிக்கப்பட்டது. இரவு 07:30 மணிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 16.02.2007 அன்று என்னை போலீஸார் விசாரித்தபோது 1ம் எதிரி ராஜசிம்மன், 2ம் எதிரி பாபு, ஐயப்பன் மற்றும் சிலர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீஸார் என்னை விசாரித்தபோது 1ம் எதிரி ராஜசிம்மன் மற்றும் சிலர் தியாகராஜனை இழுத்து சென்றதாக சொன்னேன் என்றால் சரிதான். போலீஸார் விசாரித்தபோது வீட்டில் உள்ள டியுப்லைட் உடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7. சம்பவம் நடந்த இடம் தியாகராஜனின் வீட்டில் இருந்து சுமார் 200 மீட்டர் தூரம் என்றால் சரியல்ல. குறைவாக இருக்கும். எனக்கு வயது 75. 15வருடங்களாக கண்ணாடி போட்டுள்ளேன். தேர்தல் சம்பந்தமாக 1ம் எதிரிக்கும், தியாகராஜனுக்கும் விரோதம் இருந்தது என்று போலீஸில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீஸார் சம்பவ இடத்திற்கு வரும்போது சுமார் 08:00 அல்லது 08.15 மணி இருக்கும். போலீஸார் நடந்த விவரத்தினை கேட்டார்கள், நான் நடந்த விவரத்தினை கூறினேன். என்னுடைய லக்கி ஒயின்ஸ் என்ற பெயரில் கடை நடத்திய விவரம் எனக்கு தெரியாது. தியாகராஜனுக்கும், செம்பகராயநல்லூரை சேர்நத

முருகையன் என்பவருக்கும் இடையே கத்தி குத்து வழக்கு இருந்தது பற்றி எனக்கு தெரியாது. தியாகராஜன், ஜெயபால், ரமேஷ்குமார் ஆகியோர்கள் மீது வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடக்கும் போது நான் இரண்டறை கிலோ மீட்டர் துாரத்தில் இருக்கும் என் வீட்டில் இருந்தேன் என்றும், பிறகு கேள்விப்பட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்று கூறினால் சரியல்ல. என்னை நான் ஏற்கனவே நீதிமன்றம் சென்று அனுபவம் இருப்பதால் போலீஸார் கண்ணுற்ற சாட்சியாக பொய்யாக ஜோடித்துள்ளார்கள் என்றும் நானும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகளை தொடர்பு படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

ஒப்பம்/- சுப்பிரமணியன்

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.